# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **C.C. No.98/2025** |
| Deposition of witness | : | P.W.2 |
| Name | : | கிருஷ்ணமூர்த்தி |
| Father's /Husband Name | : | ஜெகநாதன் |
| Village | : | காங்கேய நகரம் |
| Taluk | : | குடவாசல் |
| Age | : | 75 |
| Occupation | : | ஓய்வு |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on 30th day of September 2025.
A1, A2, A4,A5 present. A3 absent. Petition under section 355 BNSS filed. Allowed.

**முதல் விசாரணை:-**

நான் தற்போது குடியிருந்து காங்கேய நகரத்தில் குடியிருந்து ஓட்டுநராக ஓய்வில் இருந்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். கடந்த 20.05.2024 ம் தேதி இரவு 07.30 மணியளவில் மன்மத சுவாமி கோவில் திருவிழாவில் காவடி வந்துகொண்டிருந்த போது சத்தம் கேட்டு நான் வெளியே வந்து பார்த்த போது எனது மகன் அ.சா.1 கோபிசங்கரை எதிரிகள் விக்னேஷ், மகேஷ், முத்து ஆகியோர் தடிக்கம்பாலும் பக்கத்தில் கிடந்த கட்டையாலும் அடித்தார்கள். அவ்வாறு எதிரிகள் அடித்ததில் எனது மகன் இடதுபக்க கண்ணத்தில் காயம்பட்டு பல்லில் அடிப்பட்டது. அப்போது அங்கு வந்த எனது மூத்த மகன் செந்தில்குமார் என்பவரையும் கல்லாலும் கம்பாலும் அடித்ததில் அவரது தலையில் காயம் ஏற்பட்டது. எதிரிகள் விக்னேஷ், மகேஷ் என்னை கீழே தள்ளவிட்டார்கள். எதிரிகள் விக்னேஷ், மகேஷ் என்னை குச்சிகாரி மகனே, தேவிடியா மகனே என அசிங்கமான வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், காயம்பட்ட எனது மகன்களை அரசு மருத்துவமனைக்கு அனுப்பிவைத்தேன். எந்த ஊர் என்று எனக்கு ஞாபகமில்லை. அ.சா.1 கொடுத்த புகாரில் போலீசார் வந்து விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை-

நான் எனது ஊரில் பெரும்பாண்மை சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். எதிரிகள் 4 மற்றும் 5 வீடுகள் உள்ள சிறுபான்மை சமூகம் என்றால் சரிதான். ஊரில் யார் யாரை விசாரித்தார்கள் என்று எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. நான் ஊரில் இல்லை. போலீசார் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் அன்றே வந்துவிட்டார்கள் என்றால் சரிதான். திருவிழாவிற்கு காவடி எடுப்பதற்கு பாதுகாப்பிற்காக போலீசார் அங்கு காவடியுடன் வந்தார்கள் என்றால் சரிதான். பாதுகாப்பிற்கு வந்த போலீசார்களுக்கு என்ன நடந்தது என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். நடந்ததாக சொல்லப்படும் சம்பவம் ஊரில் அனைவருக்கும் தெரியும் என்றால் சரிதான். ஆற்றங்கரையிலிருந்து காவடி எடுப்பதற்கு எனது குடும்பத்தை சேர்ந்த அனைவரும் சேர்ந்து வந்தோம் என்றால் சரிதான். அவ்வாறு இருக்கையில் வீட்டிலிருந்த என்னையும் எனது மகன்களையும் தாக்கியதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனக்கு தங்கை மகன் உண்டு என்றால் சரிதான். திருவாரூக்கு அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 எனது தங்கை மகன் அழைத்து செல்லவில்லை என்றால் சரிதான். ஆனால் பேரன் வந்தான். பேரன் பெயர் ஞாபகம் வரவில்லை. எனக்கு ஒரே பேரன் தான். வலங்கைமான் அரசு மருத்துவமனைக்கு அ.சா.1 சென்றார் என்றால் சரிதான். அங்கு சிகிச்சை எடுத்துகொண்டு வந்தார். எனது மகன் அ.சா.1 நண்பன் மணிகண்டன் கோயம்புத்தூரில் உள்ளார் என்றால் சரிதான். அவர் ஒரு பெரும்பாண்மை சமூகத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். மணிகண்டனும் திருவிழாவிற்கு வந்திருந்தார் என்றால் சரிதான். 1வது எதிரி தங்கையை மணிகண்டன் காதலிப்பதாக சொன்னார் என்றாலும் மணிகண்டன் பெண் கேட்டார் என்றாலும் அதை மறுத்துவிட்டார் என்றாலும் சரிதான். பெண் நான் கேட்கவில்லை எனது மகன் தான் கேட்டார் என்றால் சரிதான். அதனால் எனது குடும்பத்திற்கும் 1 வது எதிரி குடும்பத்திற்கும் வருத்தம் இல்லை என்றால் சரிதான்.. 20.05.2024 அன்று காவடி எடுத்து வரும்போது அ.சா.1ம் மணிகண்டனும் 1வது எதிரியின் தங்கையிடம் குடிபோதையில் திருமணம் செய்ய வற்புறுத்தி பிரச்சனை செய்தார்கள் என்றால் சரியல்ல. காவடியுடன்

வந்தவர்கள் அதை தடுத்த போது ஓடி கீழே விழுந்தார்கள் என்றால் சரியல்ல. வலங்கைமான் மருத்துவமனையில் குடிபோதையில் விழுந்ததாக மருத்துவக்குறிப்பு இருந்ததால் அதை மறைத்து தற்போது பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது மகன், மணிகண்டன், மகள் மீது 1வது எதிரி புகார் அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அதை பொறுத்து ஊரில் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் சரிதான். மேற்படி பிரச்சனையை ஊரில் புகார் கொடுத்து பெண் பிரச்சனை என்பதால் வெளியில் தெரியாமல் இருப்பதற்காக சமாதானமாக ஒத்துக்கொண்டு எனது நண்பருக்கு பெண் கொடுக்கவில்லை என்ற காரணத்திற்காக நான் மருத்துவனையில் சேர்ந்தேன் என்றால் சரியல்ல. மணிகண்டனுக்கு தீய பழக்கம் உடையவர் என்பதால் பெண் கொடுக்க மறுத்துவிட்டார்கள் என்றும், நான் பெரும்பாண்மை சமூகத்தை சேர்ந்தவர் என்பதால் எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளளேன் என்றால் சரியல்ல. மணிகண்டனுக்கு ஆதரவாக அவர்கள் விருப்பத்திற்கு எதிரிகள் இணங்க வேண்டும் என்பதற்காக எதிரிகள் மீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை - இல்லை.**

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.30 16:00:09 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`